ௐ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ச.] 1915ஆு ஏப்பரல்மீ [பகுதி ச.

## கடோபநிஷத்து.

உ-வது அத்தியாம், ச-வது வல்லி,
க-வது மந்திரம்.

சுயம்புவான (பரமேஸ்வரன்) வெளியில் பிரவர்த்திக்கிற இந்திரியங்களைச் சிருஷ்டித்தார். ஜீவன் அக்காரணத்தால் வெளியிலுள்ளவைகளையே பார்க்கிறான், அந்தராத்மாவைப் பார்க்கிறதில்லை. விவேகியானவன் மோட்சத்தை யிச்சிக்கிறவனாயும், விஷயங்களினின்று திரும்பினவனாயும் அந்தராத்மாவைப் பார்க்கிறான்.

உ. பாலர்கள் (அவிவிவேகிகள்) வெளியிலுள்ள விஷயங்களை அனுசரிக்கிறார்கள். அவர்கள் வியாப்தமான மிருத்யுவின் பாசத்தை யடைகிறார்கள், விவேகிகள் மோட்சத்தைச் சாசுவதமென்று தெரிந்து சம்சாரமண்டலத்திலிருக்கிற அநித்தியபதார்த்தங்களை விரும்புகிறதில்லை.

ந. எந்தப் பரமாத்மாவால் (ஜீவன்) ஆகாரத்தையும், இரசத்தையும், கந்தத்தையும், சப்தங்களையும், ஸ்பரிசங்களையும், சம்போகத்

தையும் நன்றாய் அறிகிறானோ, அவனால் இந்த லோகத்தில் அறியப் படாது மிச்சமாயுள்ளதுவே அந்த பரமாத்மா.

௪. ஸ்வப்நத்திலேற்படும் வஸ்துக்களையும், ஜாக்கிரத்திலேற் படும் வஸ்துக்களையும் எந்தப் பரமாத்மாவால் (ஜீவர்) பார்க்கிறானோ; அந்த வியாபகமாயும், விபுவாயுமுள்ள பரமாத்வை ஞானி தெரிந்து கொண்டு துக்கிக்கிறதில்லை.

௫. எவன் இந்தக் கர்மபலத்தை யனுபவிக்கிற ஜீவ ஆத்துமா வையும், சமீபத்திலிருக்கிற முக்காலத்துமுள்ள ஈசுவரனையும் அறிகி றானோ (அவன்) இங்ஙன மறிந்தபிறகு தன்னை இரட்சித்துக் கொள்ள மாட்டான். (இறைவனிரட்சிப்பன்)

௬. எவன் சலசகிதபஞ்ச பூதங்கட்கும் முன்பிராரத்துவ தவத் திறபடி பிறந்தனனோ, எவன் இருதய குகையைப் பிரவேசித்துப் பூதங்களுடனிருக்கிறானோ (ஆன்மாவாகிய) அவனை யறிந்தவனே பிர மத்தையறிந்தவனாகிறான். *

௭. கர்மபலத்தைப் புசிக்கிற சிவன் பிராணனோடு கூடவிருக்கி றவன், சர்வதேவதா ரூபமானவன். பிருதிவிமுதலிய பூதங்களுடன் கூடினவன் இருதயபுண்டரீகத்தின் துவாரத்திலிருக்கிறவன், இது வே யறியத்தக்கது.

௮. ஜாதவேதஸ் எனப் பெயருள்ள அக்கினி அரணிக்கட்டை களில் வைக்கப்பட்டிருக்கிறது. கர்ப்பிணி ஸ்திரீகளால் கர்ப்பம்போல நன்றாகப் போஷிக்கப் படுகிறது, பிரதிதினம் சாக்ர சீலர்களாயும் அவிசை யுடையவர்களாயு மிருக்கிற மனிதர்களால் துதிக்கத்தகுந் தாக விருக்கிறது. அதுவே யறியத்தக்கது.

---

*இந்த மந்திரத்தில் சிவசப்தத்தை வலிய வெடுத்துக்கொண்டு "எந்தப் பகவான் பிரமாவைச் சிவனுக்கு முன்னுண்டு பண்ணினனோ" என மத்வாச்சாரி யர் வரைந்து வைத்தனர். "ப்ரஹ்மவிஷ்ணுருத்ரேந்த்ராஸ்ஸம் ப்ரஸூயந்தே நகாரணம் காரணந்துத்யேஸஸ்ஸர்வைச்வர்ய ஸம்பந்நஸ்ஸர்வேச்வரசம்புரா காசமத்யஇதி" (பிரமவிஷ்ணுருத்ரேந்திராதிகள் பிறப்பிக்கப் படுகிறார்களெ ன்றும், அதனால் அவர்கள் சகத்காரணரல்லரென்றும், சர்வைசுவரிய சம்பன் னனும், சகலஜகதீசனும், அந்தருபாசனவிதிகளால் தியானிக்கப்படுபவனும், தகராகாசமத்யகதனாகிய சம்புசப்தவாச்யனுமாகிய பரமசிவனே ஜகத்காரண வஸ்து) என்று அதர்வசிகோபநிஷத் பிரதிபாதகமான வாக்கியத்தை அவர் கண்டிம் கேட்டிமிராரெனவூகிக்கின்றனம்.

௯. எதினின்றும் சூரியனுதிக்கிறானோ, எதில் அஸ்தமனத்தை யடைகிறானோ அதனைச் சகலதேவர்களு மடைகிறார்கள், அவனை யொருவனும் அதிக்கிரமிக்கிறதில்லை, அதுவே யறியத்தக்கது.

௧௦. எந்தப் பரமாத்மா இந்த லோகத்தினரிடத்து (அந்தர்) ஆத்மாவாக விருக்கிறதோ அதுவே லோகாந்தரத்தி லிருக்கிறவர்கட்கும் (அந்தர்) ஆத்மாவாக விருக்கிறது. பேதமிருப்பதாக வெவன் பார்க்கிறானோ அவன் சம்சாரத்திற்குமேல் சம்சாரத்தையடைகிறான்.

௧௧. இந்தப் பரமாத்மா மனதினாலே யடையத்தக்கது, இதில் கொஞ்சமும் பேதமில்லை, எவனிதில் பேதம்போல் பார்க்கிறானோ அவன் மிருத்யுவுக்குப் பின்மிருத்யுவை யடைகிறான்.

௧௨. சென்றகாலம் வருங்காலம் இவற்றிற்கு ஈசானராதலின் கட்டைவிரல் பரிமாணமுள்ள புருஷன் இதயமத்தியில் நிற்பாராயினன், இதை யறிந்தவன் தன்னைக் காத்துக்கொள்ள விச்சிக்கிறதில்லை, உன்னால் கேட்கப்பட்டவஸ்து இதுவே, இவை முதலிய வாக்கியங்களால் கூறப்பட்ட குணங்களுடையதே.

௧௩. மூன்று காலத்துமுள்ள ஈசானரான புருஷர்கட்டை விரலளவுள்ள* புகையில்லாத தேஜஸ்போலிருக்கிறான். அவனே யிப்போதும் அவனே நாளையதினமு மிருக்கிறான், அதுவேயறி.

௧௪. பர்வதங்களின் உச்சியில் பெய்யுமழை விழுந்தோடுகிறதோ அங்ஙனம் மனிதனில் அந்தர்யாமியா விருக்குந்தன்மை வெவ்வேறிடங்களில் வெவ்வேறாக இருக்கிறதாகப் பார்க்கிறவன் பர்வதத்தின வெள்ளம் அனேகபள்ளங்களில் விழுவதுபோலச் சம்சார பள்ளங்களில் விழுகிறான்.

௧௫. எங்ஙனம் சுத்த சலத்தில் சேரும் சுத்தசலம் அதுபோலாகிறதோ அங்ஙனம் மனனம் பண்ணும் புருஷனுடைய ஆத்மாவும் பரமாத்ம ஞானத்தால் சுத்தி யடைவன்.

மணவழகு.

---

*ஆன்மாவின் இருதயகுகையில் அங்குஷ்ட பிரமாணமாயுளளவர் சிவபெருமானே யென்பதற்கு இந்தமந்திரத்தில் சிவபெருமானை ஈசசப்தத்தால் குறிக்கப்பட்டிருக்கிறது. ஈசசப்தம் "சம்புரீச:பசுபதிச்சிவ:" எனும் நிகண்டாற்சிவபெருமானுக்கேயுரியதென்பது ஸ்பஷ்டம். சிவபெருமான் அபரிச்சின்னராயினும் அவரை யங்குஷ்டவளவினராகக் கூறினமை உபாசகனுடைய இதயத்தையபேட்சித்தேயாம், மனிதரிதயம் எத்துணைப் பிரமாணமுடையதோ அத்துணைப் பரிச்சின்னமாகிய ரூபத்தையே பரமேஶ்வரன் அவரவர்கள் உபாசனை சித்தியின் பொருட்டுக் கொண்டருளுவர். ஆகவே தகராகாசமத்யகதனாயுள்ளவர் சிவபெருமானென "சம்புராகாசமத்யக இதி" என அதர்வசிரசு அருளியது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# விருந்தோம்பல்.

இன்று யான் உபந்நியசிக்க மேற்கொண்டவிடயம் "விருந்தோம்பல் என்பது. இது விருந்து × ஓம்பல் என இரு மொழிகளாலாயவோர் தொடர்மொழி. "விருந்தினர்களை யுபசரித்தல்" என்பது இதன் திரண்டபொருளாம்.

இதைப் பின்வருமாறு பிரித்து; அதற்கேற்ப விடைகூறிமுடிப்பதே என்றன் உபந்நியாச மாகும்,

அவையாவன:—(1) விருந்தர்வார்யார்? (2) விருந்தினரை ஓம்ப வேண்டுவோர்யார்? (3) ஓம்புதல் என்பதின் பொருளும் முறையும் என்ன? (5) ஓம்புதற்குரிய சாதனங்களெவை? (5) இதனால் எய்தும் பயன்யாது? (6) இவ்வறம் புரிந்து பேறு பெற்றவர்யாவர்?

1. விருந்து என்பது புதுமை யெனப்பொருள் படும். இதுபண்பாகு பெயராய்ப் புதிதாய் வந்த வரையுணர்த்தும், மீண்டும் ஆகுபெயராய் அங்ஙனம் புதிதாய் வந்தவர்க்கு உணவளித்தல் முதலிய உபசாரங்களையுங் குறித்தலால் அப்போது இருமடியாகு பெயராகும். ஆனால் இவண் உணவளித்தல் முதலிய உபசாரங்களைக்குறிக்க "ஓம்புதல்" என்னும் வேறுமொழி வந்திருப்பதால் இங்கு "விருந்து" என்பது புதிதாகவந்தவர்" எனவே பொருள்படும், சுற்றத்தாரை விருந்தினர் என்று கொள்ளுதல் எவ்வாற்றானும் பொருந்தாது. சுற்றத்தாரை உபசரிப்பதையே விருந்தினரை யுபசரித்ததாக எண்ணுவதும் சொல்லுவதும் சரியல்ல, சுற்றத்தார் வேறு. விருந்தினர் வேறு. சுற்றத்தாராவர் பயன் கருதி நம்மால் உபசரிக்கப்படும் நம்முடைய பந்துக்கள், விருந்தினராவர் பண்டறிவுண்மையிற் குறித்துவந்தாரும், அஃதின்மையிற் குறியாது வந்தவருமாக இருவகையாவார். சுற்றத்தாரும் விருந்தினரும் வேறாவார் என்பதை "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கலுனென்றாங் கைம்புலத்தாறோம்பல" என்

னும் திருக்குறள் வலியுறுத்தும். இக்குறளில் இல்வாழ்வான் இவ்வைவரையும் உபசரிக்க வேண்டுமென்றும், அதுவே அவனுக்குரிய தலையாய அறமென்றும், வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அவ் ஐவராவார்:—தென் புலத்தாராகிய பிதுரரும், தெய்வமாகிய தேவரும், விருந்தாகிய அதிதிகளும் ஒக்கல் என்னும் சுற்றத்தாரும், தானும். சுற்றத்தாரெனப் பொருள்படும் ஒக்கல் என்னும் மொழியும், அவர்க்கு வேறுவார் விருந்தினர் என்பதைவிளக்க "விருந்து" என்னும் வேறு மொழியும் வந்திருப்பதால் விருந்தினர்வேறு, சுற்றத்தார்வேறு என்பது வெள்ளிடை மலைபோல் விசிதமாகும். இங்குத்தன்னையோம்புதலும் அறனெனப்பட்டது யாதோவெனின், எல்லாவறங்களும் தானுளனாய்நின்று செய்யவேண்டுதலின் என்க. ("Charity begins at home" "தன்னைப்பற்றி தர்மம்" என்னும் பழமொழிகளும் ஈண்டு கருதற்பாலன.) இவ்வைந்து அறங்கள் ஐந்தையும் இல்வாழ்வான் நடத்தவேண்டுவது பற்றியே அரசனுக்கிறைப்பொருள் ஆறிலொன்றாயிற்று என்பதும் உணரற்பாலது. இனி, இவ்வறங்கள் ஐந்தனுள் விருந்தோம்பலை மட்டும் இவ்வாறு சிறப்பித்துக் கூறுவானேன் எனின், முன்னைய இரண்டும் கட்புலனாகாதாரை நினைந்து செய்வன வாதலானும், பின்னைய இரண்டும் பிறர்க்கிதலன்மையானும், இடைநின்ற விருந்தோம்பல் சிறப்புடைத்தாய்க் கொள்ளப்பட்டது. ஈண்டு சுற்றத்தாரை ஓம்பல் பிறர்க்கிதலன்மை யென்ற பரிமேலழகியார் வாக்கும் கருதத்தக்கது. இதுகாறும் கூறியவற்றால் நம்மை அறிந்தும் அறியாமலும் நம்மிடம்வரும் பலரும் விருந்தாவார் என்பது பெற்றாம்.

பின்னும் விருந்தாவார் யாரெனின், பிரமச்சாரியும், சந்நியாசியுமாவார்கள். என்னை? பிரமச்சாரி, கிரகஸ்தன், வானப்பிரஸ்தன், சந்நியாசி ஆகிய நால்வகை ஆசிரமத்தவருள், கிரகஸ்தனும், வானப்பிரஸ்தனும் நீங்கலாக, மற்ற இருவரும் தாமே அட்டுண்ணா நிலையிலுள்ளவர்களானதால் அவ்விருவருமே கிரகஸ்தனால் விருந்தாக ஏற்கத்தக்கவர்கள். இல்லறத்தான் இவ்விருவரையும் உபசரியாது தன்னைப்போன்ற கிரகஸ்தனையே உபசரிப்பனேல், அது வீழ்வார்க்கு வீழ்வாரும் சாவார்க்குச் சாவாரும் துணையாமாறுபோலப் பயனற்றுப் போகுமேயன்றி, தான் இல்லறத்தை மேற்கொண்டதாலாய பயனையடைய வழியாகாது.

"அட்டுண்டு வாழ்வார்க் கதிதிகளெஞ் ஞான்றும்
அட்டுண்ணா மாட்சியுடையவர்—அட்டுண்டு
வாழ்வார்க்கு வாழ்வார் அதிதிகளென் றுரைத்தல்
வீழ்வார்க்கு விழ்வார் துணை" என்ற முனைப்பாடியார் திருவாக்கு இதனை வலியுறுத்தும்.

இதனால் மேற்கூறிய வர்களோடு, பிரமச்சாரி, சந்நியாசி என்பவர்களும் விருந்தாவார் என்று பெறப்பட்டது.

2. இனி, விருந்தினரை ஓம்பவேண்டுவார்யார்? என்பதைப்பற்றி ஆராய்வாம். அடைதற்கரிய மானிடப் பிறவியைப்பெற்ற புருஷனொருவன் எய்தலாவதோர் புருஷார்த்தங்கள் நான்கனுள் பொருளும் இன்பமும் போலாது, அறமானது இம்மை, மறுமை, வீடென்னும் மூன்றனையும் பயத்தலான் அறமே முதற்கண் நிறுத்தப்பட்டு, சிறப்புடைத்தாயது என்பது ஒருதலை. அவ்வறமும் இல்லறம், துறவறம் என இருபகுதியுடைத்து. எனினும், இல்லறமே முதலாகப் பெற்றதுயாதுபற்றிகூறுதும். பாவத்துக்கஞ்சி நல்வழியில் ஈட்டியபொருளைப் பிரமச்சாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி, துறந்தார், துவ்வாதவர், இறந்தார், தென்புலத்தார் தெய்வம், விருந்து, ஒக்கல் ஆகிய பதின்மருக்கும் பங்கிட்டுக்கொடுத்து, தான் உண்ணுவதே இல்வாழ்வான் கடமையென்றும், அப்பதின்மரினும் விருந்தினரை ஓம்புதற்காகவே ஒருவன் இல்வாழ்க்கையை மேற்கொள்வதென்றும், விருந்தினரை ஓம்பாவழி, இல்லின் கண்ணிருத்தலும் பொருள்செய்தலும் பயனற்றவையா மெனவும் வற்புறுத்திக் கூறியிருப்பதால், இல்வாழ்வாரே விருந்தினரை ஓம்பவேண்டியவர் என்பது பெற்றாம். இதை "இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு" என்னும் வேதமொழி விளக்கும். இல்லறமே நல்லறமென்றதும் இத்தகைய அறங்களை செய்வதனாலென்க. "துறந்தார்க்குத் துப்புரவுவேண்டி மறந்தார்கொல் மற்றையவர் கடவம்"எனத்துறவறவியலில், தவம் எனம் அதிகாரத்தில் கூறிய செய்யுட்கருத்தையும் இதனுடன் ஒத்துப்பார்க்க.

தொழில் முறையில் பார்க்குமிடத்து, உழவுத்தொழிலுக்குரிய வணிகரும், வேளாளரும், அதனைச் செய்விக்கும பலரும் ஆதிகாலந் தொட்டு விருந்தினரை யுபசரிக்கும் துறையை மேற்கொண்டொழுகி வந்தார்களென்று நூல்களால் கருதக்கிடக்கிறது. என்னை! உழவுத்

தொழிலைச் சிறப்பித்த நம்தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனுர் கூறிய "உழுதுண்டு வாழ்வாரேவாழ்வார் மற்றெல்லாந் தொழுதுண்டு பின்செல்பவர்" என்ற குறளில் "உழுது என்பதற்கு" எல்லோரும் உண்ணும்படி உழுதலைச்செய்து "என்று பரிமேலழகர் உரைவிளக்கி யிருப்பதும், "உழவினுர்கைம்மடங்கினில்லை விழைவதூஉம் விட்டே மென்பார்க்குநிலை" "இரவார் இரப்போர்க் கொன்றீவர்கரவாதுகைசெய் தூண்மாலையவர்" "விருந்தோம்பலுக்குப் பயன்கூறும்முகத்தானே கூறிய "வித்துமிடல் வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி எச்சின்மிசைவான்புலம்" என்ற குறள்களும்,"வேளாளன் என்பாண்விருந்திருந்க வுண்ணுதான்" "இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும், உழவிடை விளைப்போர்" என்பது முதலான பெரியார்வாக்கும் ஈண்டுக் கருதற்பாலன.

3. ஓம்பல் என்பதின் பொருள்யாது? என்பது நமது அடுத்த விசாரணையாகும். ஓம்பல் என்பது வழுவாமற்செய்தல், புறந்தருதல், காப்பாற்றல், உபசரித்தல், உண்பித்தல் என்னும் பொருள்களில் வந்திருப்பதால் "விருந்தினரை ஓம்புதல் என்பது விருந்தினர்க்கு உணவளிப்பது என்று மாத்திரம் பொருள்கொள்ளத்தக்கதல்ல. விருந்தினர் விரும்பும் பல்பொருளையும் அல்லது அவர் வேண்டுவது எத்தகைய உயர்ந்த பொருளாயினும் கொடுத்து, அவர்களுக்கு வருந் துன்பங்களைப் போக்கிக்காத்து உபசரிப்பது என்றும் பொருள்படும், விருந்தினன் எப்பொருளைக் கேட்டாலும் பெரியோர்கள் அப்பொருளைக்கொடுத்து விடுவார்களேதவிர, அவற்றுல் தாமடையும் இலாபத்தைக் கருதார்கள். இதை நோக்கியன்றோ "மருந்தேயாயினும் விருந்தோடுண்" "விருந்து புறத்ததாத்தானுண்டல் சாவாமருந்தெனினும் வேண்டற்பாற்றன்று" என ஆன்றேரும் கூறிப்போந்தனர். இங்குமருந்து என்றது தேவாமிர்தத்தை, அவரவர் வியாதிக்குத்தக்கவாறு வைத்தியன் கொடுக்கும் கசப்பு மருந்தையல்ல. "தேவாமிர்தமெனும் அதன் சிறப்பைநோக்காது அதையும் விருந்தினர்க்குப் பகிர்ந்து கொடுத்து நீயும் உண்" என்பதே பொருள். மருந்து தேவாமிர்தமெனப் பொருள்படுவதை "ஏவாமக்கண் மூவாமருந்து" என்பதோடு ஒத்துப்பார்க்க,இதனுல் விருந்தோம்பல் என்பது தம்மிடம்வந்தார் யாவரேனும் அவர் தம்முடன் உண்ண இசைவாராயின் அவர்க்குமட்டும் உணவளிப்பது அல்லவென்றும், "ஒழுக்கம் விழுப்பந்தரலான் ஒழுக்க முயிரினுமோம்பப்படும்" என்பதாலும், ஒழுக்க முடைமையானது இல்லறத்தானுக்

குரிய அறங்களில் ஒன்றாகையானும், ஒழுக்கமாவது தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் ஓதப்பட்ட ஒழுக்கத்தினையுடையராதல் எனப் பொருள்படுவதாலும், இல்லறத்தான் ஒவ்வொருவனும் தன் வீட்டில் உண்ண இசைந்தவனை உண்பித்தும், அல்லாதானுக்கு வேண்டுவன கொடுத்து உபசரித்தும், மற்றும் அவர் விரும்புவனவற்றைச் செய்தும் அவர்களைக் களிப்பிப்பது என்பதே பொருளாகும்.

உபசரிக்க வேண்டிய முறையாதெனின், கூறுதும்:—விருந்தினரைத் தூரத்தில் கண்டபோதே அவர்கள் முகமலரும்படி தான் குளிர்ந்தபார்வை யுடையவனாய் அவர்கள்சற்றுக் கிட்டியவுடன் தைரியமாய் வருமாறு இன்முகங்காட்டி, மிக்க சமீபத்தில் வந்துழி, எதிர்கொண்டழைத்து, மனதார இன்மொழிபுகன்று, வீட்டிற்கழைத்துச் சென்று, ஆசனமளித்து, வருணாசிரமத்திற்குத் தக்கபடி தன்னாற்கூடிய வளவு உபசரித்தல் வேண்டும். விருந்தினரைச் சேய்மைக்கண் கண்டுழி இன்முகங் காட்டாவிடின் அவர்கள் அங்ஙனேவாடி நீங்குவார்கள். அவர்கள் முகம் அனிச்சமலரினும் மெல்லியதாம். மலர்களெல்லாவற்றுள்ளும் மெல்லியதான அனிச்சமலர் மோந்தால்வாடுந் தன்மையது, விருந்தினரோ தம்மை ஏற்பவர்முகம் வேறுபட்டுத் தம்மை நோக்கின் வாடிவிடுவார்கள். "மோப்பக்குழையும் அனிச்சம் முகந்திரிந்து நோக்கக்குழையும் விருந்து" என்னும் அமுதவாக்கின் கருத்தும் இதுவல்லவா! அன்றியும், ஒருமரத்தில் ஒருவன் ஒருபழத்தை யடையக்கருதுவனேல், அம்மரம் முதலில் அரும்புடையதாய், அவ்வரும்பும் உதிர்ந்துபோகாமல் மலராய், பின்னர்காயாய், கடைசியில் கனியானாலன்றோ முதலிலிருந்து தான்கருதியபழத்தை அம்மரத்தினின்றும் அடையலாமென்னும் நம்பிக்கையோடு ஆவலுற்றிருப்பான் அங்ஙனமாகாது, கனிபெறக்கருதியமரம் அரும்பே கொள்ளாமலிருந்தாலும், அல்லது அரும்பு உண்டாய் உதிர்ந்து போனாலும், அல்லது மலராகி, காயாய் வெம்பிப்போனாலும் எங்ஙனம் பழம் கிடைக்குமென்றுகருதி மரத்தையடைவான்? அதுபோல ஒருபொருளைப்பெற விரும்பிவரும் விருந்தினனும் வரவேற்பானது குளிர்ந்தபார்வையும் இன்முகமும் வாய்மை இன்மொழியும் கண்டாலொழிய அவனிடம் விரும்பியது கிடைக்குமென்று நம்பி அவனை யடையமாட்டான். ஆகையின், முறையே அரும்பு, மலர், காய், கனிகள்போன்ற கண்ணோக்கு, நகைமுகம், இன்மொழியின் வாய்மை, கொடை இவைவிருந் தேற்பார்க்கு அவசிய மென்பதாயிற்று. "கண்ணோக்கரும் பாநகை

முகமோனண்மலரா, இன்மொழியின் வாய்மையே தீங்காயா—வண்மை, பலமா நலங்கனிந்த பண்புடையாரன்றே, சலியாதகற்பதரு" "இன்சொல்விளை நிலனுவீதலே வித்தாக, வன்சொற்களைகண்டு வாய்மையெருவட்டி, அன்பு நீர்ப்பாய்ச்சி அறக்கதிரீனவோர், பைங்கூழ் சிறுகாலைச்செய்" என்ற பெரியார்வாக்குகள் ஈண்டுப்பெரிதும் கவனிக்கற்பாலன. அன்றியும், இவற்றுளெல்லாம் அன்போடு உபசரித்தலே இன்றியமையாதது. அன்போடு செய்யாவழி, இவ்விருந்தோம்பல் யாதொருபயனையுந் தராது. அன்புண்டாயவழியே விருந்தோம்பல் கூடுமென்பது பற்றியே, அன்புடைமைக்குப்பின் இவ்விருந்தோம்பல் அமைக்கப்பட்டிருக்கும் அதிகார முறையானே நன்குவிளங்கும்.

4. விருந்தோம்புவதற்குரிய சாதனம்:—நன்மனையாளைப் பெற்றிருப்பதே இதற்குப் பெரியதோர் சாதனமாம். மனையாள் கணவனோடு இசைந்து ஒழுகாவழி, எங்ஙனம் இல்லறம் நடைபெறுதோ அங்ஙனமே விருந்தோம்பலும் நடைபெறுது. "இல்லது என் இல்லவள் மாண்பானல் உள்ளது என் இல்லவள் மாணுக்கடை" என்றபடி இல்லவள் இசைந்தால் எப்படிப்பட்ட வறுமைக்காலத்தும் விருந்தோம்பலாம் அவள் இசையாவிடின், குபேரனையொத்த செல்வனாயினும் இனிதோம்பவியலாது. இதனுலன்றே "மழைதிளைக்கும் மாடமாய் மாண்பமைந்த காப்பாய், இழைவிளக்கும் நின்றிமைப்பின் என்னும்—விழைதக்க, மாண்டமனையாளை யில்லாதான் இல்லம், காண்டற் கரியதோர்காடு" என்றும் கூறியுள்ளார். மனையாள் விருப்பமில்லாமல் விருந்தோம்ப விரும்பினவர்கள் பட்டபாடுகளை அநேக கதைகளில் அன்பர்பலரும் கேட்டிருப்பாராகையால் நான் அதனை விரித்துரைக்க வேண்டுவதில்லை. இல்வாழ்வான் செய்யவேண்டிய அறங்கள் பலவற்றிற்கும் இல்லாள் இன்றியமையாத் துணையானது பற்றிதான் இல்லாள் வாழ்க்கைத் துணைஎனப் பட்டாள். இத்தகைய சிறப்புவாய்ந்த இல்லாளோடு இனிதமர்ந்து ஒத்த அன்புடையவர்களாய் இவ்வறத்தைப் புரிதல் வேண்டும். எனவே, பொருள்முதலிய பலவற்றினும், நன்மனையாளே முக்கிய சாதனம் என்பதாயிற்று.

5. பயன்:—விருந்தோம்புவதால் இம்மையில் வறுமைநோயால் பீடிக்கப்படாமல், இலட்சுமி கடாக்ஷம் பெற்று, எடுத்தகாரியம் பலவற்றிலும் சித்தியடையலாம். இதை "வருவிருந்துவைகலுமோம்புவான் வாழ்க்கை பருவந்து பாழ்படுதலின்று" அகனமர்ந்து செய்

யாளுநறையும் முகனமர்ந்து நல்விருந்தோம்புவானில் "வித்துமிடல் வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி எச்சின்மிசைவான்புலம்" என்னும் குறள்களால் அறியலாம். ஆனால் இதனால் இம்மைப்பயனை யடையலாமே யொழிய மறுமைப்பயனாகிய வானுலகவின்பங் கிட்டுமோ வெனின், "செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான் நல்விருந்து வானத்தவர்க்கு" என்னும் குறளால் விருந்தோம்புவான் மறுபிறப்பில் தேவனாய் வானிலுள்ளவர்க்கு நல்லவிருந்தாவான் அதாவது வானத்தாராலும் உபசரிக்கப்பட்டு நன்குமதிப்பை யடைந்து வானவரிலும் மேம்பட்ட சுகத்தை யடைவானென்பது வெளியாயிற்று; இதுமாத்திரமா? இவ்விருந்தோம்பலானது ஐம்பெரும் வேள்வியின் ஒன்றாகலின், இது பெரியோரால் வேள்வியென வழங்கப்பட்டது. ஐம்பெரும் வேள்விகளாவன:—(1) பிரமயாகம்=வேதமோதல் (2) தேவயாகம்=ஓமம்வளர்த்தல் (3) மாநுடயாகம்=விருந்தோம்பல் (4) பிதுர்யாகம்=நீர்க்கடனாற்றல் (5) பூதயாகம்=பலியீதல். இதனால் விருந்தோம்புவார் வேள்வியினாலாய பயனையும் அடைவாரென்பது ஏற்பட்டது, "இனைத்துணைத் தென்பதொன்றில்லை விருந்தின் துணைத்துணை வேள்விப்பயன்" என்று கட்டளையிட்டிருப்பதால் (எத்துணைச் சிறப்பாக ஒருவன் விருந்தோம்புகிறானோ அத்துணைப்பயன் அடையலாம்) நாம்விருந்தினரை முறைப்படி உபசரித்தால் எய்தலாவதோர் பெரும்பயனை யடையலாமென்பது திண்ணமாயிற்று.

மறைபுலங் கொளவியம்பும் இம்மையம்மை வீடெனு மூன்றினுள் இம்மையம்மைப் பயன்களை அடையலாமே யொழிய, இவ்விருந்தோம்புதலால் வீடடைதல் கூடுமோ என்பார்க்கு அறுபான் மூம்மையடியார்களுள் விருந்தளித்துப் பேறுபெற்றாரே சான்றாவார்.

6. விருந்தோம்பி வீட்டின்பம் பெற்றவர்யார்? நம் அறுபான் மும்மையடியவருள்* ஒருவராய் விளங்கிய இளையான் குடிமாற நாயனார் இல்லறத்திலிருந்து, உழுது பயிர்செய்து, நன்மனைவியாய்க்கப் பெற்று, தம்மில்லிற்கு வந்தார் யாவரேனும் அன்போடெதிர் கொண்டழைத்து, அமுதுபடைத்து அழியாமுத்தியையடைய வில்லையா? செல்வமேவிய நாளிலன்றிக் கஷ்டம்வந்த காலத்தும் இவ்வரியபணியைச் செய்தார்கள். தம்மிடம் ஒன்று மில்லாது வருந்தியிருந்த காலத்தும், தம்மிடம்வந்த விருந்தினரை அன்போடு வரவேற்று இன்மொழிகூறி, செய்யவேண்டும் உபசாரங்களையுஞ் செய்து பகல் வித்திய செந்நெல் முளையை வாரிக்கொணர்ந்து, மாதர்கை கொடுக்க அவர்கள்

அதைக் கொண்டு இன்னமுது செய்தாகளெனின், விருந்தளிப்பது எத்துணைக் கஷ்டகாலத்தும் அவசிய மென்பதும், மனைவியின் ஒற்றுமை முதலியனவும் முன்னர்காட்டியபடி அவசிய மென்பதும் ஏற்படவில்லையா? இதுமாத்திரமா? அம்மாது சிரோமணி, "மனைவியார் கொழுநர்தந்த மனமகிழ் கறிகளாய்ந்து, புனலிடைக் கழுவித்தக்க புனிதபாத்திரத்துக் கைம்மை, வினையினில் வேறுவேறு கறியமுதாக்கிப்பண்டை, நினைவினால் குறையை நேர்ந்து திருவமுதமைத்து நின்று" என்றபடி முன்போல அடியார்க்குச் சிறந்தவுணவு அமைப்பதற்கில்லையே யென்று வருந்தினரே யொழிய, தாம்வறுமையடைந்ததற்காக வருந்தினாரில்லை. இதுவே மேலோர்செய்கையாம். இதைச் சிவஞானபோத பாஷியகர்த்தரான சிவஞானமுனிகள் பின்வருமாறு விளக்கி யிருக்கிறார்கள்.

"பண்டைநினை வெண்ணிநொந்தார் பாகஞ்செய்மாறராந்
தொண்டர் மனைவியார் சோமேசா — கண்டோம்
நயனுடையான் நல்கூர்ந்தானாதல் செயுநீர
செய்யாதமை கலாவாறு"

இச்சரித்திரத்தால் விருந்தாவர் புதிதாக வருபவர் என்பதும்; இல்லறத்தான் அவரை எப்படிப்பட்ட வறுமைக்காலத்தும் காக்கவேண்டு மென்பதும்; வீட்டுக் கூரையைப் பிரித்து விறகாக உபயோகித்ததையும், பகல்வித்திய நெல்முளையை வாரிக்கொணர்ந்தமையும் நோக்க, விருந்தினரை ஓம்புவதில் தமக்கு நேரிடும் கஷ்டநஷ்டங்களைப் பெரியோர்கள் கருதார்களென்பதும்; மாரிக்காலத்திரவினில் இல்லமடைந்தபின் வந்தும் அவரை எதிர்கொண்டு ஈரமேனி நீக்கி இடங்கொடுத்து, ஆரஇன்னமுதூட்டுதற்கு ஆசைப்பட்டமை முதலியவற்றை நோக்க, உபசரிக்கவேண்டிய முறை யின்னதென்பதும்; நாயனார் வருந்தியபோது அவர் மனைவியார் செந்நெல்முளை கொணர்ந்தால் வல்லவாறமுதாக்குவே னென்றதும், கொண்டுவந்தபின், வாய்தலினின்று வாங்கி, சிந்தையின் விரும்பிசெய்ய வேண்டுவன செய்து வெறுப்பில் இன்னடி சிலாக்கியதும், குழிநிரம் பாதபுன்செய்க்குறும் பயிர்கொண்டுகைம்மை வினையில் வேறுவேறு கறியமுதாக்கியதும், பண்டை நினைவினால் குறையை நேர்ந்து திருவமுதமைத்ததும் நோக்க, நன்மனைவியிருந்தால் எப்படிப்பட்ட கஷ்டகாலத்தும் விருந்தளிக்கக்கூடுமானபடியால் மனைவியே சிறந்தசாதன மென்பதும்; விருந்தினராகவந்த பெருமான் சோதியாகி மறைந்து, பின்னர் இடபாரூடராய் தோன்றி

"அன்பனே யன்பர்பூசை யளித்தநீ யணங்கினோடும்
என்பெருந் தலத்தையெய்தி யிருநிதிக் கிழவன்றானே
முன்பெரு நிதியமேந்தி மொழிவழி யேவல்கேட்ப
இன்பமார்ந் திருக்கவென்றே யருள்செய்தா னவர்க்குமிக்காள்"

என்றிருப்பதால் விருந்தோம்பியவர்கள் சகல சம்பத்தையும் அடைந்து, சிவசந்நிதியில் சென்று அழியா வின்பத்தையும் அடைவார்க ளென்பதும் உய்த்துணரத்தக்கது.

ஆனால், இந்நாயனார் செய்தது அடியார் பூசையல்லவா? இவ்வடியார் பூசையை "விருந்தோம்பல்" என்று சொல்வது எங்ஙனம் பொருந்தும்! என அன்பர் சிலர் ஐயுறலாம். நம்குன்றை முனிகள, நற்றவத்தவர் வேடமே கொண்டுவந்த சிவபிரானை நாயனார் வரவேற்றதை "மாரிக்காலத் திரவினில் வைகியோர், தாரிப்பின்றிப் பசித்தலைக்கொள்வது, பாரித்தில்லமடைத்த பின்பண்புற, வேரித்தாரான் விருந்தெதிர் கொண்டனர்" என்றே கூறியிருப்பதால் அவரை விருந்தாகவே யேற்றனர் என்பது வெளியாகிறது.

இந்நாயனார் விருந்தோம்பிய அருமைத்திறத்தை நம்பியாண்டார் நம்பிகள் வியந்து கூறியிருப்பது இங்குகவனிக்கத்தக்கது.

இயலாவிடைச் சென்றமாதவர்க் கின்னமுதாவிதைத்த
வயலார் முளைவித்துவாரி மனையலக்காலால் வறுத்துச்
செயலார் பயிர்விழுத் தீங்கறியாக்குமவன் செழுநீர்க்
கயலாரிளையான் குடியுடை மாறனெங் கற்பகமே"

சிறுத்தொண்ட நாயனார் அரும் புதல்வனையும் அட்டு விருந்திடவில்லையா? விருந்தினர் விழைந்தது அரியபொருளென வெண்ணினரா? மனைவியும் இசையாவிடின் அஃது எங்ஙனம் முடியும்! இவ்வரியகாரியம் செய்தபோது அன்பிற் குறைவுண்டா? இதுவல்லவோ விருந்தின் மாண்பு! "ஒருகுடிக்கு நல்லசிறுவன் ஒருமகனை, தாதையரிய தாய் பிடிக்கும்பொழுதிற் றம்மனமுவந்து, ஏதமின்றிய மைத்தகறியாமிட்டுண்பதென மொழிய"

"இனியமழலைக் கிண்கிணிக்கால் இரண்டும்மடியின் புடையிடுக்கிக்
கனிவாய்மைந்தன் கையிரண்டுங் கையாற்பிடிக்கக் காதலனும்
நனிநீடுவகை யுறுகின்றாரென்று மகிழ்ந்து நகைசெய்ய
தனிமாமகனைத் தாதையார் கருவிகொண்டு தலையரிவார்"

என்றபடி இவ்வரிய பணியைச்செய்து முடிவில் தம்மகனும் உயிர்பெற்றெழுந்து, எல்லோரும் இறைவன்றிருவடியை யடைந்தாரெனில் அடியார்கு விருந்தளிக்கும் மாட்சிமை இத்தன்மைத்தென்று சொல்லவும் வேண்டுமோ?

அப்பூதியடிகள் தம்மகனிறந்ததையும் நோக்காது, அடியார்க்கமுதளித்து ஆனுச்சிறப்படையவில்லையா?

மானக்கஞ்சாறர் "கலசமுலைக் கன்னிகாதற் புதல்விகமழ்குழலை பஞ்ச வடிக்கு நல்கெனலும், அற்றைத்தினம் திருமணநாளாயிருந்தும், அசுபமெனக் கருதாது அவள் கூந்தல் அரிந்தளிக்கவில்லையா!

(இதனால் விருந்தினர் கேட்கும் எப்பொருளையும் கொடுத்தல் அவசியமென்பது பெறப்பட்டது).

இயற்பகை நாயனார் "செய்தவர் வேண்டியதியாதுங் கொடுப்பச் சிவன்றவனுய்க், கைதவம்பேசி நின்காதலியைத் தருகென்றலுமே மைதிகழ் கண்ணியையீந்தவன்" என்றபடி மனைவியையுங் கொடுத்து உபசரிக்கவில்லையா?

ஸ்ரீ ஞானசம்பந்தப் பெருமான் சிவநேசச் செட்டியார் திருக்குமாரத்தியை உயிர்ப்பித்தகாலத்துச் சொல்லியதாகச் சொல்லிய சேக்கிழார் பெருமான் சிறந்தமொழியும் ஈண்டுகருதத்தக்கது.

> "மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
> அண்ணலடியார் தமையமுது செய்வித்தல்
> கண்ணினால் அவர் நல்விழாப்பொலிவு கண்டார்தல்
> உண்மையாமென உலகர்முன் வருகென வுரைப்பார்.

இதுகாறுங் கூறியவற்றால், "விருந்தாவார் புதிதாகவருபவர், பிரமச்சாரி, சந்நியாசி ஆசிரமத்தவர்களாகிய இவர்கள்தாமென்பதும், விருந்தேற்க வேண்டுபவர் இல்லறத்தானென்பதும், ஓம்புதல் என்றால அவர்களுக்கு உணவளிப்பது மாத்திரமல்ல, வேண்டுவன பலவும் கொடுத்து உபசரிப்பதென்பதும், இன்முகங்காட்டி இன்சொல்வழங்கி வரவேற்க வேண்டுமென்பதும், அன்புடைய மனையாள் இல்லாவழி விருந்தோம்பல் நடைபெறாதென்பதும், இதனால் இம்மை மறுமை வேள்விப்பயன்கள், வீட்டின்பம் ஆகிய இவற்றையடையலாமென்பதும், வீட்டின்பத்தை இதனால் அடைந்ததற்கு இளையான்குடி மாற நாயனார் முதலியோரே சான்றாமென்பதும் போந்தகருத்தாம்" என்பதை அறிவித்துக் கொள்வதோடு, இவ்வித அரிய அறத்தை அனைவரும் நடத்திப் பரசிவப்பொருளின் பாதாரவிந்தத்தை யடைந்து, அத்வைத முத்தியெய்துமாறு எல்லாம் வல்லகலையுணர் புலவனை ஸ்ரீ சிவசுப்பிரமணியக் கடவுளது திவ்யசரணாரவிந்தங்களை என் மன மொழி மெய்களால் பிரார்த்திக்கிறேன்.

பொன்மார். நடேச முதலியார்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவோபாசனுமகிமை.

தொகுதி 4. பக்கம் 64. தொடர்ச்சி.

இது பற்றியே நமது குமரகுருபர சுவாமிகள்

"தானவனுகிய தன்மை பெற்ருனடி தாழப் பெற்ருற்
ருனவனுகிய தன்மை பெற்றுய்வனத் தன்மையின்றித்
தானவனுகிய தன்மை பெற்றேற் கருடாழ்சடிலத்
தானவனுகம் பெரு மாசிலாமணிச் சம்பந்தனே.

என அருளிய கட்டளைக்கலித்துறை யானும் இனிது விளங்கும் சமாதியில் ஆதாரங்கடந்த பொருளாகிய முழுமுதற் கடவுளினது இலயத்தான மாகிய அருவமென்னும் நிட்களவடிவில் மனம்லயிக்க உயிர் அதில் அழுந்தும் அது முழுமுதற் பொருளின் அருளை உயிர் பெருதற்கு ஏதுவாம் இதனுல் இயமம், நியமம், ஆசனம், பிராணுயாமம், பிரத்தியாகாரம். தாரணை, தியானம், சமாதி என்னும் எட்டங்கங்களோடுகூடிய யோகநிலைபற்றிச் செய்யப்படும். அகத்தொழில் வணக்கம் பிறவிக்கு ஏதுவாகிய உலகவிடய ஆசையற்று முழுமுதற்கடவுளின் திருவடியில் ஆன்மா அழுந்துதற்கேற்ற பெருஞ்சாதனமான தொண்டென்பது உண்மையாமென்க.

எனவே ஆன்மா அநாதிப்பொருள், மலமும் அநாதிப்பொருள்

"நெல்லிற்குமியும் நிகழ்செம்பினிற் களிம்புஞ்
சொல்லிற் புதிதன்று தொன்மையே

வல்லிமல கன்மமன் றுளவாம்." என சிவஞானபோத வெண்பாவானுந் தெற்றென விளங்கும்,

ஆன்மா மலம் இரண்டும் சமவியாபக முள்ளன ஆன்மா அறிவைக் குணமாகக் கொண்டிருத்தல் போல மலமும் அவ்வறிவைத்

தடைசெய்யும் ஆற்றலைக்குணமாகக் கொண்டுள்ளது. இவ்விருபொருளும் அநாதியே தம்முட்சம்பந்தப் பட்டிருத்தலால், ஆன்மாவின் அறிவைமலம் தடைசெய்வதாயிற்று அன்றி, ஆன்மாவின்ஞானசத்தி மலச்சத்தியினுலே தடைப்படுகின்றது என நன்குவிளங்கிக் கொள்ளல் வேண்டும்.

இங்ஙனமாயின் அகத்தொழில் வணக்கம், புறத்தொழில் வணக்கத்தினும்விசேடமுடைத்தாதற்குத் தடை என்னை இனி இந்தஅகத்தொழில் வணக்கத்தினும் அறிவுத்தொழில் வணக்கம் அதிவிசேடமுடைத்தாம்.

காயம், இந்திரியமாகிய புறக்கரணமும் மனமாகிய அகக்கரணம் ஆன்மாவின் வேறுனபொருள். ஆன்மா கேவலத்திலே, தன் இச்சா ஞானக்கிரியைகள் மலத்தினுலே தடைப்புற்றிருந்து சகலத்திலே ஒரு சிறிது ஏகதேசமாக விளங்கப் பெற்றிருப்பது. இப்பந்தநிலையில், அகக்கருவி புறக்கருவிகளாகிய துணைப்பொருள்களைக் கரணங்களாகப்பெற்றே அறிவு இச்சை தொழில்களின் வியாபாரத்தைப் பெறும்.

அவ்வியல்புடைய ஆன்மாவுக்கு முதல்வனை வணங்கும் வணக்கத்திலும் இக்கரணங்கள் ஆவசியகம் வேண்டப்படுகின்றன. அவை மாயாகருவி கரணங்களாகலின் அவற்ருேடு கூடிய வணக்கங்கள் அறிவுத்தொழில் வணக்கத்தை நோக்கக்குறைபாடுடையனவாம்.

அறிவுத் தொழில் வணக்கத்தில் ஆன்மா அருளோடு சம்பந்தப்பட்டு மலத்தடை நீங்கி மாயாகருவி கரணங்களை விரும்பாது அவற்றினும் நீங்கிஏகதேச அறிவுடையனுதலின்றித் திருவருளினுல் விளக்கமுற்ற வியாபக அறிவு இச்சைத்தொழில்களுள்ளவனுய் அகண்டாகார நித்திய வியாபக சச்சிதானந்தப் பொருளாகிய சிவத்தில் அவ்வறிவு இச்சைத்தொழில்கள் மூன்றும் அழுந்தப்பெற்று அச்சிவத்தின் ஆனந்தத்தை நுகர்ந்து சிவமும் தானும் வேறற நிற்கப்பெறுதலாகிய அத்துவித சம்பந்த முற்றிருத்தலின் ஆன்மாவினுல் நேரிற் செய்யப்படும் அவ்வணக்கம் பிறவற்றினும் அதிவிசேடமுடையதென்பது நாம் கூறுதே நிகழும்.

அத்துவித சம்பந்த முற்றிருத்தலாவது இருபொருளும் விரவுதல் (அதாவது) அபேதமாயிருத்தல்

நமது குமாரகுருபர சுவாமிகள் ஞானாசாரியர்மீது இயற்றிய மும்மணிக்கோவையில்,

(நேரிசை வெண்பா.)

"எற்கமலஞ் செய்யுமெழின் மாசிலாமணிதாட்
பொற்கமலஞ் சென்னி பொலிவித்தே—னற்கமலை
யூரிற்குறுகினேன் ஓர்மாத் திரையளவென்
பேரிற் குறுகினேன் பின்."—

என்றருளிய வெண்பாவும் இதற்குறுசான்றாம்.

இந்த வணக்கங்களையே சரியை கிரியை யோகம் ஞானம் எனச் சைவநூல்கள் நான்காக வகுத்துக் கூறும்.

பரமகருணாநிதியாகிய பரமேசுவரபிரபுவை வணங்குதலில் சித்தியாதி வேறுபாடுகளிருத்தலால் இவ்வேறுபாடுகளை நன்காராய்ந்து அவ்வவ்வுயிர்கள் இயல்புக்கேற்ப பரமேசுர பிரபுவை வணங்கியுய்யும் பொருட்டே இவ்வணக்கங்கள் விதிக்கப்பெற்றன. ஆனதால் இயன்ற தொன்றை அநுட்டித்துப் பரமேசுவரபிரபுவை வணங்கி அருள்பெற்றுஇப்பிறவித் தொல்லையாணீங்கி முத்திபெருதற்கு முயலுதல் அறிவுடையோர் கடமையாம்.

(இன்னும் வரும்)

இங்ஙனம்,
S. நடேச தேசிகர்,
கவர்ன்மெண்ட் ஸ்கூல்
தமிழ்ப்பண்டிதர்
கோட்டுச்சேரி.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# விசுவாசம்.

தொகுதி 4. பக்கம் 70. தொடர்ச்சி.

கண்டதையன்றிக் காணாததொன்றையும் உண்மையென்று நம்புதல் மரபாகாதென்பது, இக்காலத்துள்ள நவீன கல்வியின் பயனாய்க் கொண்டது. நாம் பிரத்தியட்சமாகக் கண்டகாட்சிகள் தாமும் பிழைபடுதலை நமது விஞ்ஞான அபிமானிகள் அறிகிலர்போலும்! இவைகள் பிழைபடுதலுங் கூடுமென்பது பற்றி இக்காட்சிகளை நாம் தள்ளாது கொள்ளுதல் போலவே, நமது அறிவுக்கு வருவாய்களாக இயற்கைமரபால் அமைந்துள்ள ஏனைத் துறைகளாற் பெறப்படும் காட்சிகளையும் நாம் கைக்கொண்டு ஒழுகுதல் வேண்டும். இங்ஙனமின்றேல், நாம் அறிவு பெறுவதும், இந்தப் பிரபஞ்சத்திலே சீவிப்பதுதானும் ஒருசிறிதும் கூடாவாம். மனிதர் எல்லாம் அபூரணர் ஆதலின் அவர்களது காட்சி பிழைபடுதலுங் கூடும். இதுகொண்டு நமக்குப் புலப்படுங் காட்சிகள் அனைத்தையும் தூரம் போக்கிவிட்டு நாம் மௌட்டிக சிரேட்டராய் வாழ்வதோ மானுஷ்ய தருமம்! மனிதவர்க்கம் அனைத்திலும் சாதாரணமாக அமைந்துள இயற்கைத் தருமத்தை அனுசரித்தாலன்றி, எமக்கு விருத்திக்கிரமம் வாய்ப்பது சிறிதும் கூடாதென்பதையும், இந்த இயற்கைத் தருமத்தின்வழி நம்மால் அமையும் விசுவாசத்தை நாம் அலட்சியஞ்செய்வதுண்டென்றால், நாம் எல்லாம் நமக்கே துரோகஞ் செய்வதாய் முடியுமென்பதையும் நமது விஞ்ஞானாபிமானிகள் எல்லாம் சிந்தித்தல் பெரும்பிரயோசன முடைத்தாகும்.

## விசுவாசத்தின் பிரயோசனம்,

உண்மை உணர்வு தலைப்படவேண்டியது மக்கட்கெல்லாம் இன்றியமையாது வேண்டப்படும். உண்மையை அறிதன்மாத்திரையால் பயன்பெறுவது கூடாது. அதனிடத்தே விசுவாசமாகிய உணர்வு பிறந்தாற்றானே அவ்வறிவால் நாம் பயன் பெறுவதாகும் உணர்ச

சியே எமக்கு அனுபவத்தைப் பயப்பது அறிவு எமது நினைவுமாத்திரையில் நின்றுவிடுமன்றி, யாதொரு உண்மையின் விசிட்டத்தை எமக்கு அனுபவத்திற் காட்டாது. பொய் பேசுதல் குற்றமென்று அறிந்த மாத்திரையால் எமக்கு அவ்வறிவால் எய்துதற்குரிய பயன் சித்திக்கமாட்டாது. பொய்பேசுதல் குற்றமென்று உணர்ந்தாற்றானே எமக்கு அப்பயன் சித்திக்கத்தக்கது நாம் எமது சிற்சத்தி ஆற்றலின் இயற்கை நெறியினைக் குறித்துச்சிறிது ஊன்றிச் சிந்திப்பதுண்டெனின், உணர்ச்சியே எமது இயக்கம் அனைத்தினுக்கும் காரணம் என்பது செவ்விதிற் போதரும். அறிவுவிளக்கம் இல்லாத மிருக தாவரங்கள் தாமும், இந்த உணர்ச்சியாற்றானே இயங்குகின்றன. மனிதன் தானும், அறிவின் விருத்தியுறுங்காறும் உணர்ச்சி ஒன்றுகொண்டே இயங்குவன். அறிவின் விருத்தி அடைந்தபின்னரும், அவன் பெறும் அறிவு அவனது உணர்ச்சியிற் சென்று உறைத்தாற்றானே நாம் அவனைப் பிடித்தற்கு முயல்கின்றேம். ஆகவே உணர்வே எமக்கு அறிவினுஞ் சிறந்ததாகும். அறிவு உணர்வின்றிப் பயன்படமாட்டாது உணர்வு அறிவின்றியும் பயன்படும். அறிவினது சகாயம் சிறிதும் இல்லாமலும், உணர்ச்சிமாத்திரத்தானே எமக்கு வேண்டிய அநேக தொழில்களை நாம் பல முறையும் செய்வதுண்டு. நாம் எமது கண்களை இமைப்பதெல்லாம் அறிவுகொண்டல்ல. உணர்வு மாத்திரையானேயாம். எமது அறிவு நிகழாமை பற்றிக் கண்களை இமைத்தல் குற்றமென்று யாரும் சொல்லமாட்டார். இவ்வுணர்ச்சியின் மாட்சியை நாம் உள்ளவாறு எடுத்துச் சொல்லப்புகின், இது எம்முன் மறைந்து நின்று எம்மை இயக்கும் ஓர் அற்புதயந்திரம் என்பது நன்கு துணியப்படும்.

இவ்வுணர்ச்சிக்குக் காரணமாகிய எமது இயற்கை விவேகம் (Instinct) எனப்படும் புத்திதத்துவமானது எமது சிற்சத்தியாற்றலுக்குரியதோர் கருவியாகும். இந்த இயற்கைக்கருவி, எம்முன் மறைந்து நின்று, எமது அறிவின் வியஞ்சகம் இன்றியும் எம்மை இயக்குவது. இந்தக் கருவியின் கண்ணே நாம் ஈட்டும் அறிவுசென்று உறைக்குமிடத்து, அவ்வுறைப்பளவாக இக்கருவியும் விருத்தியுறும். இக்கருவியை நாம் சமயஞானங் கொண்டு ஆராய்வதுண்டெனின், இதன் கண்ணே சிவசத்தியின் அதிட்டானம் விசேஷமாக அமைந்திருத்தலை செவ்விதிற் காணலாம். கடவுள் எம்மை உணர்வுக்குணர்வாய்நின்று இயக்குவர் என்று சமயசாத்திரங்கள் சாதிப்பதும் இக்

கருத்துப்பற்றியேயாம். எம்மைத் தொழின்முறைகள் அனைத்தினும் இயக்குவர் கடவுளேயாயினும், அவர் அங்ஙனம் இயக்குவ தெல்லாம் இவ்வுணர்ச்சி வாயிலாற்றானேயாகலின், இவ்வுணர்ச்சி சிவச்செய லுக்கு மிக அணிமையிலுள்ளதோர் படி எனக் கொள்ளத்தக்கது. கடவுள் ஆன்மாக்களை எல்லாம் அவரவர் தகுதிப்படி உணர்ச்சியைக் கிளர்த்தி, அவ்வுணர்ச்சி வாயிலாக அவர்களை இயக்குவராதலில் இவ் வுணர்ச்சி எமக்கு எத்துணைச்சிறப்புடைய தென்பதும், இதன்வழி நாம் ஒழுகாதொழிவது கூடாதென்பதும் இனிது போதரும். அல்லாமலும், இவ்வுணர்வாற்றல் இல்லாவழி எமக்கு அறிவுதானும் பயன் படுவது சிறிதும் கூடாதாதலின், இங்ஙனம் சிறப்புடைய உணர்வை நாம் அலட்சியம் செய்து அறிவைமாத்திரம் பொருட்படுத்துவது, எமது அறிவின் சிறுமையைக் காட்டிநிற்கும் என்க.

இனி இவ்வறிவின் மேற்கொண்ட பேரபிமானங் காரணமாக, அறிவின்றி நிகழும் உணர்வே விசுவாசம் என்றுசிலர் வாதிப்பர். இது பெருந்தவறுடைத்தாம். என்னை? அறிவோடு கூடிய காட்சியிற்றானே எமக்கு விசுவாசம் பெரிதுமுண்டாதலின். ஆனல் அறிவின் வியஞ்சகம் இல்லாமலும் எம்மிடத்தே உணர்வு பிறத்தலும் உண்டு. இவ் வுணர்வுதானும் எம்மாற் பெரிதும் போற்றப்படத்தக்கதேயாம். அறிவோடு கூடிய காட்சியில் எமக்கு இயற்கை முறையாக விசுவாசமுண் டாதல் போலவே, உணர்வோடு கூடிய காட்சியினும் உண்டாவது. ஆனபின், அறிவோடு கூடியவழி எழுந்த விசுவாசத்தை மாத்திரம் கைக்கொண்டு, உணர்வோடு கூடியவழி எழுந்தவிசுவாசத்தைப் புறங் காண்பது எங்ஙனம் மரபாகுமோ? விசுவாசத்தின் விசேடத்தை, அது அறிவோடு கூடியவழி நாம் இனிது காணத்தக்கதாக இருக்க, அறிவு வியஞ்சகப்படாமைபற்றி அவ்விசுவாசத்தை நாம் அலட்சியஞ் செய் தல் விவேக தருமமாகுமோ? விசுவாசம் எங்ஙனம் தோன்றுமாயினும் அது எம்மால் ஆக்கப்படுவதல்ல, அது தோன்றுதற்கியைந்த தகுதி காணப்படுமிடத்துத் தானே தோன்றுவது. இது மானுட இயற் கைத் தருமம், இவ்வியற்கைத் தருமத்தை நாம் விலக்குதல் கூடுமோ கூடுமெனின் இத்தருமத்தின் விலகிநாம இயக்குமாறெங்ஙனம்? நாம் விருத்திபெறுவதெவ்வாறு? மனிதர் எல்லாம் சிற்றறிவுடையாராதலின், அவர்கள் எல்லாத் துறைகளையும் ஒருங்களந்து தமது அறிவிடைக் காண்டல் கூடாது. கூடாதாயினும், அவரிடத்தே அவரதுவாழ்வுக்கு

முக்கியசாதனமாக அமைந்துள்ள உணர்வின்வழி ஒழுகுதலே அவர்க்கெல்லாம் இன்றியமையாப் பெருங் கடனாகும்.

இனி எமக்கு உண்மையாவதுதான் யாது? எமது உணர்ச்சியில் உண்மையாகப் புலப்படும் ஒரு பொருளே எம்மால் உண்மை என்று கொள்ளப்படுவது. எமது உணர்ச்சி தவறுடைத்தாயினும் ஆகலாம். எமதுணர்ச்சிவழி நிற்றலே எமக்கெல்லாம் கடனாதலின், எமதுணர்வுக் காட்சிக்குச் சத்தியமாகத்தோன்றும் தோற்றத்தின் வழி ஒழுக வேண்டுவதே நாம் செய்யத்தக்கது. ஒரு தோற்றம் எமது சோத்திரேந்திரியக் காட்சிக்கு விடயமாதன் மாத்திரையால், அது எமக்கு உண்மையாகமாட்டாது. அத்தோற்றம் எமது உணர்ச்சியிற் சென்று உறைத்தாலே நாம் அதனை உண்மை என்று கொள்வது கானற்சலம் எமது சோத்திரேந்திரியத்துக்கு விடயமாயினும், அது உணர்ச்சியிற் சென்று உறையாமையினால், அதனை நாம் உண்மை என்று கொள்வதில்லை. ஆகவே உணர்வுதானே எமக்கு அறிவினும் மிகச்சிறந்ததோர் சாதனம் என்பது எல்லாரும் ஒத்துக்கொள்ளத்தக்கது.

அறிவு நமக்கெல்லாம் பெரிதும் சிறப்புடைய தென்பதை நாம் சிறிதும் மறுப்பதில்லை. அறிவோடுகூடாத உணர்வினும், அறிவோடு கூடிய உணர்வு சாலச்சிறப்புடைத்தேயாகும். இது கொண்டு அறிவோடுகூடாத உணர்வை நாம் புறக்கணித்துவிடுவது கூடாது. அறிவு எமக்கு எப்போதும் வாய்க்கமாட்டாது. நாம் எல்லாம் சிற்றறிவும் சிறுதொழிலும் உடையேமாதலின், சர்வஞானமுடையராய் எல்லாக் காட்சிகளையும் ஒருங்கே காணுதல் ஒருபோதுங்கூடாது. அக்காட்சிகளும், அறிவு சென்று தீண்டுதற்கரிய கடவுள் விஷயத்திலென்றால் எமக்கு எவ்வளவுக்கு சகித்திருக்கத்தக்கதென என்பதை நாம் நமது சிந்தையிலே நன்றாக அழுத்துதல்வேண்டும். அறிவு நிகழுமிடத்தும், அது நிகழாவிடத்தும், நாம் நமது உணர்வு கொண்டே ஒழுகுவது. இந்த உணர்வை நீக்கிவிட்டால், நாம்எவ்வளவு அறிவுடையராயினும் அவ்வறிவால் எமக்குச் சிறிதும் பிரயோசனமில்லை. இந்த உணர்வு எம்மிடத்துள்ளதோர் இயற்கைமரபாக அமைந்து எம்மை எல்லாம் இந்தப் பிரபஞ்சத்திலே வழிகாட்டி நடத்துதலின், நாம் அவ்வுணர்வின் வழிச்சென்றாலன்றி நாம் இங்குச்சீவித்தல் தானும் கூடாது,

(இன்னும் வரும்)

இங்ஙனம்,

யாழ்ப்பாணம் S. சபாரத்தின முதலியார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# தமிழில் வடமொழி கலத்தல்.

எல்லாமொழிகளும் வடமொழி உச்சரிப்புக்கு ஏறக்குறைய ஒத்திருக்க, தமிழொன்று மாத்திரம் சிறிதும் ஒவ்வாமலிருக்கின்றபடியால் பிறமொழிகளையும் கற்றுணர்ந்த வடமொழி அபிமானிகள், தமிழைமாத்திரம் மிகக் கவனித்துக் கூடிய வரையில் அசைத்து அசைத்துப் பார்க்கின்றார்கள். தமிழையும் வடமொழி சம்பந்தமானதென்று நிலை நாட்ட வேண்டுமென்பதே அவ்வசைப்பதன் கருத்து.

முன்னம் எத்தனையோபேர் அசைத்திருக்கின்றனர்; சிறிதுகாலத்திற்கு முன் சிலர் அசைத்தனர்; இப்பொழுது சிலர் அசைக்க முயல்கின்றார்கள்.

உயர் நிலையும் நுண்ணறிவும் பெற்ற பெரியார்களில் தமிழின் அருமைபெருமை முதலியனவற்றை எடுத்து விளக்கி அணைப்பார் ஒரு சிலரேயாவர்; அவ்வருமை பெருமை முதலியவற்றை மறைக்க முயல்வார் பலராகின்றனர் ஆயின், இப்படிப்பட்ட கருத்தோடு ஐரோப்பிய விஞ்ஞானிகள் தலையிடவே மாட்டார்கள்; அவர்கள் ஞாயமாகவே போகின்றார்கள்.

தமிழ் இவ்வளவு அசைவிற்கும் அசையாமல் மேம்பாடு அடைந்து கொண்டுவந்து நாளதுவரையில் குடும்பங்களில் மனைவி மக்களோடு அன்புடன் பேசத்தக்க பாஷையாக இருந்துகொண்டிருக்கிறது.

தாங்கள் அபிமானிக்கின்ற பாஷை மறைந்தும் அபிமானியாத பாஷை விளங்கியும் வருவது ஓர் வியப்பாகின்றது.

பாஷைசித்தர்வழக்கு;
பழந்தமிழ் வழக்குமாம்.

பிறமொழியிலுள்ள சொற்களை ஆங்கிலமுதலிய வற்றில் அவ்வம் மொழி நடைக்கேற்றபடியே எழுதுகின்றார்கள், தாயை யுணரத்

னும் மதர் என்னும் ஆங்கில மொழியானது மாத்ரு என்னும் ஆரியச்சொல்லின் திரிபாயினும் ஆங்கிலர் மதரென்று எழுதுவார்களே அன்றி மாத்ரு என்று எழுதவே மாட்டார்கள். அதுபோல வடமொழிச் சொற்களையும் தமிழில் எடுத்துக்கொள்ள வேண்டுவது ஆவசியகமாக இருந்தால் தமிழ் நடைக்கேற்றபடியே தான் எழுதவேண்டும். தமிழில் பிறசொற்கள், வண்டின் வாய்ப்பட்ட புழுப்போலும், வேரின் வாய்ப்பட்ட எருப்போலும் திரியுமென்பர். வடமொழியுச்சரிப்பாகவே எழுதின் தமிழ்ப்பெருமையுந் தமிழ்ப்பெருமிதமும் வேறுபட்டுத் தமிழ் நடைகோணி ஆபாசமாய்ப் போய்விடுமென்பதற்குச் சந்தேகமே யில்லை; பறை யறையலாம்.

இக்கருத்தையே தமிழ்ப் பெரியார்களும் கூறியிருக்கின்றார்கள்; அடியிற்காண்க.

"எல்லாக் கூத்துகளும் எல்லாப் பாட்டுகளும் எல்லா விசைகளும் வடவெழுத்து ஒரீஇ வந்த எழுத்தாலே கட்டப்பட்ட வாக்கியக் கட்டளைக் கூறுபாடுகளும்" (சிலப்பதிகாரம்) "தமிழென்பது வடவெழுத்து ஒரீஇ வந்த எழுத்தானே உறழ்ந்து கட்டப்பட்ட வாக்கியக் கூறுகள் "என்பார்" (சிலப்பதிகாரம்) இவைபோல்வன கவனிக்கத் தக்கனவாம். தாட்சண்ணியத்துக்காகத் தாளம் போடலாகாது.

"தாட்சண்ணியம அர்த்தநாசம்" என்பதை நன்றாக அறிந்து கொள்ளல் வேண்டும்.

"கருமஞ்சிதையாமற் கண்ணோட வல்லார்க்கு, உரிமையுடைத் திவ்வுலகு" (உத்தரவேதம்) கௌரவத்தையும் தாட்சண்ணியத்தையும் பொருளையும் கருதிவடமொழி யுச்சரிப்பாகவே தமிழில் எழுதினால் அது தமிழாகாது, பாளி முதலிய பிறபாஷையுமாகாது, வேறோர் நூதனபாஷையாய்விடுமென்பதற்கு என்ன தடையிருக்கின்றது?

தொல்காப்பியம், சங்கச்செய்யுள், பஞ்சகாவியம் திருக்குறள், நாலடியார், நீதிநெறி விளக்கம் முதலிய செந்தமிழ் நூல்களில் வடசொற்கள் ஒரு சிலவாம்.

அப்பெரியாரெல்லோரும் தமிழ் நடையின்பெருமிதத்தை நன்கு அறிந்துகொண்டு அதனைப் பாதுகாத்துக்கொண்டே வந்தனர். இக்காலத்துள்ள தமிழ்ப் பெரியார்களும் அவர்கள்போலதைப் பாதுகாவல்

செய்தல் சாலவும் அறமாகின்றது; நீதியாகின்றது; முறைமையாகின்றது. ஐரோப்பிய விஞ்ஞானிகளும் தமிழ் நடையைப் பாதிரிமார்களும் வடமொழி யுச்சரிப்புக் கலந்த தமிழை அருவருக்கின்றனர்.

பண்களின் இலக்கணமும் அறிந்தவர்கள் தமிழில் வடமொழியையும் நன்கு கற்ற சிவஞான முனிவர் தமிழை அபிமானித்திருக்கினும் அவர்கள் எழுதிய தமிழை உணரின் அவர்களெல்லாரும் ஞாயமாகமாகவே தான் பேசியிருக்கின்றார்கள்.

தமிழர்கள் இருமொழியையும் அபிமானிப்பது போலத் தமிழேனும் அபிமானிக்கின்றனன்.

இக்கூற்று முகமனுரை அன்றென்பதை தமிழ்விண்ணப்பம் என்னும் ஒரு சிறுநூலால் அறிந்து கொள்ளலாம். (முகமனுரை=உபசாரவார்த்தை) ஆயின் அந்தந்தத் தேசாசாரத்தின் முறைமைக்கு ஒப்பஏற்பட்ட சட்டத்தின்படியே அந்தந்தத் தேசத்தை ஆளுகை செய்தல் திறமையாதல்போல அந்தந்தப் பாஷை நடைக்கேற்றபடி ஏற்பட்ட இலக்கணத்தின் படியே அந்தந்தப்பாஷையை ஆளுகைசெய்தல் திறமையாகின்றது.

சட்டம்; பொருட்சட்டம், உரிமைச்சட்டம், தண்டச் சட்டம், கோயிற்சட்டம், மடத்துச்சட்டம் எனப்பலவாம். இலக்கணமும் எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், இசையிலக்கணம், செய்யுளிலக்கணம். அணியிலக்கணம் எனப்பலவாம்.

ஒவ்வொரு பாஷையிலும் ஒவ்வொரு சுவையுள்ளது; அச்சுவை பெரும்பான்மையும் உச்சரிப்பினுலாவது அவ்வுச்சரிப்பு காரணத்தோடு வந்தபடியால் நல்லோர் அச்சுவையைக்கெடுக்க முயலமாட்டார்கள்.

திருவருட்சந்நிதியில் அவ்வப்பாஷைக்காரர் அவ்வச் சுவையை உண்டு ஆநந்தித்தல் வேண்டுமென்றே. மலையாளத்தின் சுவையையும் தெலுங்கின் சுவையையும் அவற்றிற்கு இலக்கணம் அமைக்க வந்தார் ஒருவகையில் கெடுத்தனர்.

இனித் தமிழ் முதலிய சொற்களையும் வடமொழியில் அப்பாஷை நடைக்கேற்றபடியே எழுதியிருக்கின்றார்கள் உ-ம்—உலகம் லோகம்; வட்டம் விர்த்தம்; நட்டம்—நிர்த்தம்; நாயம்—ந்யாயம்;

காலை—கால்ய=விடியற்காலம், எலி—இலி—இலி—: (கன்) உலக முதலியவற்றிற்கும் ஒரு முதற்சொல் உண்டு. தமிழில் சிலஎழுத்து மிகுதியென்றும் சில உச்சரிப்புக் குறைவென்றும் சொல்கின்றனர். அவர்களே மிகுதியான எழுத்தை நீக்கக்கூடாமையாக இருக்கின்றதென்றும் சொல்லுகின்றனர். தமிழுக்கு அவைகுறைவாயின் வடமொழியிலும் அவ்விதக் குறைவுகள் இல்லாமல் இல்லை.

கல்லாதவர்களால் உண்டாகின்ற பிழைகளைத் தமிழின்மேலேற்றித் தமிழ் திருத்தமில்லை என்று சொல்லுதல் கூடாது. தமிழ் அகத்தியனார்க்குமுன்னமேயே திருத்தமடைந்திருக்கின்றது. தமிழ் வடமொழியினும் இனிதென்று பிறதேசத்தாரும் கூறியிருக்கின்றார்கள். ஒலியும் எழுத்தும் தமிழில் ஒன்று படல்போல வடமொழியில் இல்லை. மொழிநூல் பாயிரவியல் உகூ-ம் பக்கம் பார்க்கவேண்டும்.

பரம்பரையாகக் கற்பவர்களுக்கே மிகக் கடினமாக இருக்கின்றபடியாலும், என்றும் குடும்பபாஷையாக இல்லாமையாலும், வடமொழி குடும்ப உபகாரமான பாஷையாக மாட்டாது. குடும்பபாஷையின் உதவியின்றி வடமொழியைக் கற்கவும் கூடாது. தமிழ் தனிமொழியாதலால் வடமொழி உதவி வேண்டாமலே நடைபெறக்கூடியது. தனிமொழியென்னவே இயற்கை மொழியுமாம், இயற்கை மொழியென்னவே பண்டை மொழியுமாம். அது நிற்க.

இப்பொழுது ஸ்ரீமான் ராவ்பகதூர் ம-ரங்காசாரியரவர்கள் எம். ஏ. "தமிழில் எழுத்து முறையும் உச்சரிப்பு முறையும்" என்னும் ஒரு நூல் ஆங்கிலத்தில் தாமே எழுதியும் தமிழில் மொழி பெயர்ப்பித்தும் அச்சிட்டிருக்கின்றார்கள் இது தமிழிற்கு அநுகூலமான நூலாகாதென்பதற்குப் பல காரணங்களுள்ளன. ஒவ்வொன்றையும் விரிப்பின் நூலினும் மிகுமாதலாலும் பத்திரிகையும் இடந்தாராதாகையாலும் சிலவற்றை மாத்திரம் இங்கு எடுத்து விளக்குகின்றனன். இந்நூலில் துணிவுரை கூறலென்னும் இலக்கணம் இல்லாமல் இருக்கின்றது.

அச்சிலவாவன.

(1) "மேலும் ஒன்றாகவே யிருக்கும் நகரஒலியைக் குறிக்கத் தமிழில் ந, ன என்கிற இரண்டு எழுத்துக்கள் இருக்கின்றன" (2வது பக்கம்).

இன்னும் வரும்

மாகரல்-கார்த்திகேய முதலியார்.